7414

Reg. No. | | | | | | |

# அரையாண்டு பொதுத் தேர்வு – டிசம்பர் 2017

நேரம் : 3 மணி

12ம் வகுப்பு கணக்குப்பதிவியல்

மொத்த மதிப்பெண் : 200

அறிவுரை : (1). அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
(2). நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

குறிப்பு : எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்

பகுதி – அ

I. கோடிட்ட இடங்களை நிரப்புக

30 × 1 = 30

1. மொத்த இலாபம் மாற்றப்படும் கணக்கு --------.
2. எடுப்பு மீதான வட்டி ------ கணக்கில் வைக்கப்பட வேண்டும்
3. 1-4-2008 அன்றைய இருப்பாய்வின்படி முதலீடுகள் ரூ. 2,00,000 வட்டி வீதம் ஆண்டுக்கு 10% ஆகும். வட்டி பெற்றது ரூ. 15,000 எனில் 31-3-2009இல் முதலீடுகள் மீது கூடியுள்ள வட்டி -------.
4. ஆண்டுத் தொடக்கத்தில் நிலை அறிக்கை தயாரிப்பதன் மூலம் ------ முதலை அறியலாம்.
5. ---- கணக்கு, இருப்புக்கட்டும் தொகையாக கடன் கொள்முதலை அறிவதற்கு உதவுகிறது.
6. காப்பீடு முனைம முறையில் ஆண்டுதோறும் தேய்மானம் ------ ஆக செலுத்தப்படுகிறது.
7. நிலைச் சொத்தின் விற்பனை விலை ரூ. 3,00,000, விற்பனையில் ஏற்பட்ட நட்டம் ரூ. 60,000 எனில், விற்பனை நாளன்று அதன் ஏட்டு மதிப்பு ------ ஆகும்.
8. சரக்கிருப்பு விற்பனை விகிதம் ------ என்று அழைக்கப்படுகிறது.
9. மொத்த இலாபம் ரூ. 50,000; விற்பனை ரூ. 5,50,000; விற்பனைத் திருப்பம் ரூ. 50,000 எனில் மொத்த இலாப விகிதம் ------ ஆகும்.
10. ஒரு மாதத்தின் இறுதி ரொக்க இருப்பு அடுத்த மாதத்தின் ------ இருப்பாகும்.
11. நடப்புக் கணக்கின் பற்று இருப்பு, இருப்புநிலைக் குறிப்பில் ----- பக்கத்தில் இடம் பெறும்.
12. ஒரு சொத்தின் மதிப்பு அதிகரிக்கும்பொழுது, அது ----- இனமாகும்.
13. கணேஷ், குமார், சுதன் கூட்டாளிகளின் இலாபப் பங்கு முறையே 1/2, 1/3, 1/6 ஆகும். குமார் கூட்டாண்மையிலிருந்து விலகினால், புதிய இலாபப் பகிர்வு வீதம் ------.
14. பெயரளவு முதல் நிறுமத்தின் ----- இல் குறிப்பிடப்பட்டு இருக்கும்.
15. ஒரு வரையறு நிறுமம் ரூ. 10 வீதம் 60,000 நேர்மைப் பங்குகளை வெளியிட்டது. பொது மக்கள் 50,000 பங்குகளை வாங்க ஒப்பினர். ஒப்பாத முதல் ரூ. ------ ஆகும்.

II. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுது

16. இறுதிக் கணக்குகள் தயார் செய்யப்படுகையில், சரிக்கட்டுதலில் தரப்படும் அனைத்து இனங்களும் ---- தோன்றும். அ) மூன்று இடங்களில் ஆ) இரு இடங்களில் இ) ஒரு இடம்
17. 31-03-2015 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ. 3,06,000 வாராக்கடன் ரூ. 6,000 போக்கெழுதுக. மேலும் 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கிற்கு ஒதுக்கப்பட வேண்டிய தொகை ரூ. ------ ஆகும். அ) 15,000 அ) 15,300 இ) 18,000
18. நிகர மதிப்பு முறையில் இலாபம் கண்டறிவதற்கான அடிப்படை :
அ) இரு தேதிகளில் உள்ள முதல்களுக்கிடையேயான வேறுபாடு
ஆ) இரு தேதிகளில் உள்ள பொறுப்புகளுக்கிடையேயான வேறுபாடு
இ) இரு தேதிகளில் உள்ள மொத்த சொத்துகளுக்கிடையேயான வேறுபாடு
19. 1-4-2009 அன்று பற்பல கடனாளிகள் ரூ. 30,000. அவ்வாண்டு இறுதியில் பற்பல கடனாளிகள் இருப்பு ரூ. 70,000. அந்த ஆண்டில் கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் ரூ. 2,00,000 எனில் அவ்வாண்டில் கடன் விற்பனை ---- அ) ரூ. 1,00,000 ஆ) ரூ. 3,00,000 இ) ரூ. 2,40,000
20. வெறுமையாதல் என்ற சொல் தொடர்புடையது : அ) கண்ணுக்கு புலனாகாச் சொத்துக்கள் ஆ) நிலைச் சொத்துக்கள் இ) இயற்கை கனிம வளங்கள்
21. இயந்திரத்தின் அடக்க மதிப்பு ரூ. 1,00,000 தேய்மானம் ஆண்டுக்கு 10% வீதம் தேய்மானம் நேர்கோட்டு முறையில் நீக்கப்பட்டால், இரண்டாம் ஆண்டின் இறுதியில் இயந்திரத்தின் ஏட்டு மதிப்பு -----. அ) ரூ. 80,000 ஆ) ரூ. 90,000 இ) ரூ. 81,000
22. மொத்த விற்பனை ரூ. 10,00,000; மொத்த இலாபம் ரூ. 2,80,000 எனில் விற்ற பொருளின் அடக்க விலை --------. அ) ரூ. 12,80,000 ஆ) ரூ. 7,20,000 இ) ரூ. 10,00,000
23. அனைத்து செயல்பாட்டு விகிதங்களும் ----- ஆகக் கொடுக்கப்படும்.
அ) விகிதாச்சாரம் ஆ) மடங்கு இ) சதவீதம்
24. ரொக்கத் திட்டப்பட்டியல் கையாள்வது : அ) திட்டமிடப்பட்ட ரொக்கப் பெறுதல்கள்
ஆ) திட்டமிடப்பட்ட ரொக்கச் செலுத்தல்கள் இ) திட்டமிடப்பட்ட ரொக்கப் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள்
25. முதல் மீதான வட்டி கணக்கிடப்படுவது ----- மீது.
அ) தொடக்க முதல் ஆ) இறுதி முதல் இ) சராசரி முதல்
26. புதிய கூட்டாளி சேர்க்கையில், பகிர்ந்து தரா இலாபமும், காப்பு நிதியும் பகிர்ந்து கொள்ளப்படுவது: அ) புதிய இலாபப் பகிர்வு விகிதம் ஆ) பழைய இலாபப்பகிர்வு விகிதம் இ) முதல் விகிதம்
27. வெளிச்செல்லும் கூட்டாளிக்கு சேரவேண்டிய தொகை உடனே செலுத்தப்படவில்லை எனில், அத்தொகை மாற்றப்படும் கணக்கு : அ) முதல் கணக்கு ஆ) ரொக்க கணக்கு இ) கடன் கணக்கு
28. அட்டவணை Aயின்படி அழைப்பு நிலுவைக்கு கணக்கிடப்படும் வட்டி : அ) 4% ஆ) 5% இ) 6%
29. பொது வெளியீடு ----- நாட்களுக்கு அதிகமாக அனுமதிக்கப்படுவது இல்லை.
அ) 10 நாட்கள் ஆ) 3 நாட்கள் இ) 5 நாட்கள்
30. பத்திர முனைமம் இருப்புநிலைக் குறிப்பில் ----- பக்கத்தில் தோன்றும்.
அ) சொத்துகள் ஆ) பொறுப்புகள் இ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் (திருப்புக

$10 \times 5 = 50$

பகுதி – ஆ

குறிப்பு –1) எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.
2) கருத்தியல் சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 50 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்.

31. சரிக்கட்டுப் பதிவு என்றால் என்ன ?
32. மாற்றுதல் முறை என்றால் என்ன ?
33. ஏறிமதிப்பு என்றால் என்ன ?
34. நடப்பு விகிதத்தினை விளக்குக.
35. திட்டப்பட்டியலுக்கு வரைவிலக்கணம் தருக.
36. நற்பெயர் மதிப்பிடும் முறைகளைக் கூறுக.
37. அழைப்பு முன்பணம் என்றால் என்ன ?
38. 31-3-2010 அன்றைய இருப்பாய்வின்படி காப்பீட்டு முனைமம் செலுத்தியது ரூ. 16,500. சரிக்கட்டுதல் : முன்கூட்டி செலுத்திய காப்பீட்டு முனைமம் ரூ. 3,500. சரிக்கட்டுப் பதிவு தந்து, இவ்விவரம் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.
39. விடுபட்ட தொகையைக் காண்க : தொடக்க முதல் ரூ. 6,00,000; கூடுதல் முதல் ரூ. 30,000 இறுதி முதல் ரூ. 5,60,000; எடுப்பு யாது ? நட்டம் ரூ. 40,000
40. ஒரு நிறுமம் ரூ. 20,000 மதிப்புள்ள அறைகலனை வாங்கியது. அதன் பயனளிப்புக் காலம் 10 ஆண்டுகள். அதன் இறுதி மதிப்பு ரூ. 2,000. நேர்க்கோட்டு தேய்மான விகிதம் காண்க.
41. பின்வரும் விவரங்களைக் கொண்டு கடனீந்தோர் கொள்முதல் விகிதத்தைக் கணக்கிடுக.

| | |
|---|---|
| கடன் கொள்முதல் | ரூ. 1,80,000 |
| தொடக்க கடனீந்தோர் | ரூ. 24,000 |
| இறுதி கடனீந்தோர் | ரூ. 66,000 |

42. நற்பெயர் கடந்த நான்கு ஆண்டுகளின் சராசரி இலாபத்தில் மூன்று ஆண்டு கொள்முதல் எனக் கொண்டு கணக்கிடப்படுகிறது. கடந்த நான்கு ஆண்டுகளின் இலாபங்கள் பின்வருமாறு : 2001 - ரூ. 22,000; 2002 - ரூ. 28,000; 2003 - ரூ. 26,000; 2004 - ரூ. 24,000 நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடுக.
43. ஜான், பீட்டர் கூட்டாளிகள் முறையே 3 : 2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். அவர்கள் சிவா என்பவரை புதிய கூட்டாளியாக சேர்த்துக் கொள்ள முடிவு செய்கின்றனர். ஜான் தன் பங்கில் 1/5 பங்கும், பீட்டர் தன் பங்கில் 2/5 பங்கும் தியாகம் செய்கின்றனர். அவர்களுடைய புதிய இலாப பகிர்வு விகிதம் கணக்கிடுக.
44. மாருதி வரையறு நிறுமம் ரூ. 100 வீதம் 45,000 பங்குகளை 10% தள்ளுபடியில் வெளியிட்டது. குறிப்பேட்டுப் பதிவினைத் தருக.

$5 \times 12 = 60$

பகுதி – இ

குறிப்பு – 1) எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி, இவற்றுள் 45–வது வினாவிற்கு கட்டாயம் விடையளி
2) கருத்தியல் சார்ந்த வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் 150 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்

45. அ) 31-3-2012 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ. 75,000
சரிக்கட்டுதல்கள் : 1. ரூ. 5,000 வாராக்கடன் போக்கெழுதுக.
2. பற்பல கடனாளிகள் மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.
3. கடனாளிகள் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக.
பதிவுகள் தந்து இவ்விவரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டுக.

(அல்லது)

ஆ) சிந்து என்பவர் தனது கணக்கேடுகளை ஒற்றைப்பதிவு முறையில் பராமரித்து வருகிறார். அவர் கீழ்க்காணும் தகவல்களைத் தருகிறார்.

| | 31-03-2007 ரூ. | 31-03-2008 ரூ. |
|---|---|---|
| வங்கி இருப்பு | 75,000 | 50,000 |
| கை ரொக்கம் | 5,000 | 10,000 |
| சரக்கிருப்பு | 5,00,000 | 3,25,000 |
| பற்பல கடனாளிகள் | 2,00,000 | 4,00,000 |
| அறைகலன் | 50,000 | 50,000 |
| இயந்திரம் | 4,00,000 | 4,00,000 |
| பற்பல கடனீந்தோர் | 6,00,000 | 7,00,000 |

ஆண்டிடையில் அவர் ரூ. 1,00,000 கூடுதல் முதல் இட்டார். மாதந்தோறும் ரூ. 10,000 வீதம் தனது சொந்த செலவுகளுக்கு எடுத்துக் கொண்டார். அறைகலன் மற்றும் இயந்திரம் மீது 10% தேய்மானம் விலக்கப்பட வேண்டும்.
31-3-2008ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய இலாபம் அல்லது நட்டம் கண்டறிக.

46. தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை ?
47. ரொக்கத் திட்டப் பட்டியல் குறித்து குறிப்பு வரைக. ஏதேனும் நான்கு ரொக்க பெறுதல்கள் மற்றும் நான்கு ரொக்க செலுத்தல்களுக்கு உதாரணம் தருக.
48. தியாக விகிதத்திற்கும், ஆதாய விகிதத்திற்குமிடையே உள்ள வேறுபாடுகள் யாவை ?
49. முகமது அண்ட் கோ 01-04-2014 அன்று ரூ. 5,00,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. அதை நிறுவுவதற்கு ரூ. 20,000 செலவழிக்கப்பட்டது. ஆண்டுக்கு 10% குறைந்து செல் இருப்பு முறையில் தேய்மானம் விலக்கப்பட்டது. 31-03-2017 அன்று அவ்வியந்திரம் பயனற்றுப் போனதால் ரூ. 4,10,000-க்கு விற்கப்பட்டது.
ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31-ல் கணக்கு முடிக்கப் பெறுகிறது எனக் கொண்டு இயந்திரக் கணக்கையும், தேய்மானக் கணக்கையும் மூன்று ஆண்டுகளுக்கு தயார் செய்க.
50. பின்வரும் விவரங்களைக் கொண்டு நடப்பு விகிதம், நீர்மை விகிதம், துல்லிய நீர்மை விகிதம் கணக்கிடுக.

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| கை ரொக்கம் | 30,000 | செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு | 13,000 |
| கடனாளிகள் | 42,000 | கடனீந்தோர் | 47,000 |
| சரக்கிருப்பு | 45,000 | வங்கிமேல்வரைப்பற்று | 30,000 |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 18,000 | | |

51. அகில், முகில் கூட்டாளிகள் சமமான விகிதத்தில் இலாப-நட்டம் பகிர்ந்து வந்தனர். 1-4-2007 அன்று அவர்கள் முதல் முறையே ரூ. 85,000, ரூ. 65,000 ஆகும். அவர்களது எடுப்புகள் முறையே ரூ. 6,000, ரூ. 4,000 ஆகும். கூட்டாண்மை ஒப்பாவணம் கீழ்க்காண்பவைற்றிற்கு வகை செய்கிறது. அச்சரிக்கட்டுதல்களை பதிவு செய்வதற்கு முன் 31-3-2008-ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டின் நிகர இலாபம் ரூ. 30,000.
(a) முதல் மீது வட்டி ஆண்டுக்கு 5%
(b) எடுப்புகள் மீது வட்டி ஆண்டுக்கு 6% (அகில் ரூ. 180, முகில் ரூ. 120)
(c) அகில், முகில் இருவரும் முறையே ஆண்டுக்கு ரூ. 5,000 ஊதியம் பெறுகின்றனர்.
இலாப-நட்டப் பகிர்வு கணக்கையும், கூட்டாளிகளின் முதல் கணக்குகளையும் காட்டுக.

52. ஒரு நிறுமத்தின் இயக்குநர்கள் முற்றும் அழைக்கப்பெற்ற ரூ. 10 மதிப்புடைய 1000 பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தனர். அப்பங்குகள் மீது முதல் அழைப்பு பங்கொன்றுக்கு ரூ. 2 வீதமும், இறுதி அழைப்பு ரூ. 3 வீதமும் செலுத்தப்படவில்லை. இதில் 600 பங்குகள் முழுவதும் செலுத்தப்பட்டவைகளாக பங்கொன்று ரூ. 8-க்கு மறு வெளியீடு செய்யப்பட்டன. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து பங்கு ஒறுப்பிழப்பு கணக்கு மற்றும் முதலினக் காப்பு கணக்கு தயார் செய்க.

பகுதி – ஈ

3 × 20 = 60

குறிப்பு – எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும். இவற்றுள் 53–வது வினாவிற்கு கட்டாயம் விடையளிக்கவும்.

53. அ) திரு. சாய்பிரபு தனது கணக்கேடுகளை ஒற்றைப்பதிவு முறையில் வைத்துள்ளார். கீழ்கண்ட விவரங்களில் இருந்து 2012 மார்ச் 31ஆம் நாளோடு முடியும் ஆண்டிற்கான வியாபார, இலாப-நட்ட கணக்கையும், அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க.

| | 01-04-2011 ரூ. | 31-03-2012 ரூ. |
|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 38,000 | 44,250 |
| அறைகலன் | 3,000 | 3,000 |
| ரொக்கம் | 6,750 | 9,500 |
| பற்பல கடனாளிகள் | 63,000 | 88,000 |
| சரக்கிருப்பு | 25,500 | 13,000 |

| பிற விவரங்கள் : | ரூ. |
|---|---|
| எடுப்புகள் | 10,500 |
| பெற்ற தள்ளுபடி | 4,250 |
| அளித்த தள்ளுபடி | 3,000 |
| பற்பல கடனாளிகளிடம் பெற்ற ரொக்கம் | 1,35,500 |
| பற்பல கடனீந்தோருக்கு செலுத்திய ரொக்கம் | 1,13,000 |
| விற்பனைத் திருப்பம் | 4,250 |
| கொள்முதல் திருப்பம் | 1,750 |
| கூலி | 2,000 |
| வியாபாரச் செலவுகள் | 5,000 |
| பல்வகைச் செலவுகள் | 2,250 |

அறைகலன் மீது 5% தேய்மானம் நீக்குக.

(அல்லது)

ஆ) விநாயகம், கந்தன் என்ற கூட்டாளிகள் 6 : 4 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். அவர்கள் வரதன் என்பவரை 1/3 பங்குக்குச் சேர்த்துக் கொண்டனர்.

31-12-2010ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | | ரூ. | சொத்துக்கள் | | ரூ. |
|---|---|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | | 29,000 | ரொக்கம் | | 9,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு | | 6,000 | நிலம், கட்டடம் | | 25,000 |
| முதல் : | | | பொறி, பொறித் தொகுதி | | 30,000 |
| விநாயகம் | 50,000 | | சரக்கிருப்பு | | 15,000 |
| கந்தன் | 35,000 | 85,000 | பற்பல கடனாளிகள் | 20,000 | |
| பொதுக்காப்பு | | 16,000 | கழி : ஐயக்கடன் ஒதுக்கு | 1,000 | 19,000 |
| | | | நற்பெயர் | | 10,000 |
| | | | இலாப-நட்டக்கணக்கு | | 28,000 |
| | | 1,36,000 | | | 1,36,000 |

பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வரதன் என்பவரை புதிய கூட்டாளியாக சேர்த்துக் கொள்ள முடிவு செய்தனர். அவர் 2011, ஜனவரி 1ஆம் நாளன்று கூட்டாண்மை நிறுவனத்தில் சேர்ந்தார்.
(i) வரதன் ரூ. 25,000 முதல் கொண்டு வரவேண்டும்
(ii) நற்பெயர் ரூ. 26,000 என மதிப்பிட வேண்டும்
(iii) நிலம், கட்டடம் 40% மதிப்பேற்றம் செய்யப்பட வேண்டும்
(iv) பொறி, பொறித்தொகுதி 10% தேய்மானம் நீக்கப்படும்
(v) ஐயக்கடன் ஒதுக்கு ரூ. 800 அதிகரிக்கும்
(vi) பற்பல கடனீந்தோரில் ரூ. 1000 போக்கெழுதப்படும்
மறுமதிப்பீட்டுக் கணக்கு, முதல் கணக்குகள், வங்கிக் கணக்கு மற்றும் வரதன் சேர்ப்புக்குப் பிறகு 1-1-2011ஆம் நாளின் புதிய இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க.

54. திருமதி துளசி அவர்களின் 2005, மார்ச் 31–ஆம் நாளைய இருப்பாய்விலிருந்து வியாபார, இலாப-நட்டக் கணக்கையும் மற்றும் இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க

இருப்பாய்வு

| பற்று இருப்புகள் | ரூ. | வரவு இருப்புகள் | ரூ. |
|---|---|---|---|
| எடுப்பு | 10,000 | முதல் | 90,000 |
| இயந்திரம் | 30,000 | பெற்ற கழிவு | 3,000 |
| வங்கி ரொக்கம் | 10,000 | விற்பனை | 1,20,000 |
| கை ரொக்கம் | 5,000 | வங்கிக் கடன் | 40,000 |
| கூலி | 10,000 | வெளித்திருப்பம் | 5,000 |
| கொள்முதல் | 80,000 | பற்பல கடனீந்தோர் | 40,000 |
| சரக்கிருப்பு (1-4-2004) | 60,000 | பெற்ற தள்ளுபடி | 4,000 |
| பற்பல கடனாளிகள் | 40,000 | | |
| புனையுரிமை | 29,000 | | |
| வாடகை | 4,000 | | |
| வங்கி கடன் மீதான வட்டி | 500 | | |
| பொதுச் செலவுகள் | 12,000 | | |
| சம்பளம் | 7,500 | | |
| உள்திருப்பம் | 4,000 | | |
| | 3,02,000 | | 3,02,000 |

கீழ்க்காணும் சரிக்கட்டுதல்கள் செய்யப்படவேண்டும் :

1. இறுதி சரக்கிருப்பு மதிப்பு ரூ. 80,000
2. கொடுபட வேண்டிய வங்கிக்கடன் மீதான வட்டி ரூ. 400
3. இயந்திரம் மீது 10% தேய்மானம் நீக்குக.
4. முதல் மீது வட்டி 6% அனுமதிக்க வேண்டும்
5. எடுப்பு மீது வட்டி 5% அனுமதிக்க வேண்டும்.

55. ஈஸ்வரி வரையறு நிறுமத்தின் கீழ்க்காணும் இலாப-நட்டக் கணக்கிலிருந்து பின்வரும் விகிதங்களைக் கணக்கிடுக. அ) மொத்த இலாப விகிதம் ஆ) நிகர இலாப விகிதம் இ) இயக்க இலாப விகிதம் ஈ) இயக்க விகிதம் ஆகியவைகளைக் கணக்கிடுக.

31-03-2002ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான வியாபார இலாபநட்டக் க/கு

| விவரம் | ரூ. | விவரம் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 10,000 | விற்பனை | 50,000 |
| கொள்முதல் | 36,000 | இறுதி சரக்கிருப்பு | 16,000 |
| மொத்த இலாபம் கீ/இ | 20,000 | | |
| | 66,000 | | 66,000 |
| நிர்வாகச் செலவுகள் | 2,000 | மொத்த இலாபம் கீ/கொ | 20,000 |
| விற்பனை செலவுகள் | 8,000 | பங்காதாயம் | 1,000 |
| வட்டி | 3,000 | முதலீடுகள் விற்றதில் ஏற்பட்ட லாபம் | 1,000 |
| நிகர இலாபம் கீ/இ | 9,000 | | |
| | 22,000 | | 22,000 |

56. பின்வரும் விவரங்களிலிருந்து 2009 மார்ச், ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்கான ரொக்கத் திட்டப் பட்டியல் தயார் செய்க :

| மாதம் | கடன் கொள்முதல் ரூ. | கடன் விற்பனை ரூ. | நிர்வாகம் மற்றும் விற்பனை செலவுகள் ரூ. |
|---|---|---|---|
| ஜனவரி | 7,50,000 | 15,00,000 | 80,000 |
| பிப்ரவரி | 10,00,000 | 13,50,000 | 1,20,000 |
| மார்ச் | 8,50,000 | 17,50,000 | 3,00,000 |
| ஏப்ரல் | 12,50,000 | 12,00,000 | 5,00,000 |
| மே | 9,00,000 | 14,00,000 | 3,00,000 |

1. 01-01-2003ல் எதிர்நோக்கும் ரொக்க இருப்பு ரூ. 8,00,000
2. சரக்களித்தோர் அனுமதித்த கடனின் காலம் இரண்டு மாதங்கள்
3. வாடிக்கையாளர்களுக்கு அளித்த கடனின் காலம் ஒரு மாதம்
4. செலவுகள் அம்மாதத்திலேயே செலுத்தப்பட வேண்டும்
5. ஏப்ரலில் ரூ. 2,50,000க்கு நிலைச் சொத்து விற்கப்பட உள்ளது

57. ஸ்ரீகுரு வரையறு நிறுமம் ரூ. 100 மதிப்புள்ள 40,000 நேர்மை பங்குகளை 10% தள்ளுபடியில் வெளியிட்டது. பங்குகள் மீதான தொகை பின்வருமாறு செலுத்தத்தக்கது :

விண்ணப்பத்தின் பொழுது ரூ 30<br>
ஒதுக்கீட்டின்பொழுது ரூ. 30 (தள்ளுபடி சரிக்கட்டப்பட்டு)<br>
முதலாவது அழைப்பின் பொழுது ரூ. 20<br>
இரண்டாவது அழைப்பின் பொழுது ரூ. 10

நிறுமம் 40,000 பங்குகளுக்கான விண்ணப்பங்களைப் பெற்றது. இவையனைத்தும் ஒதுக்கீடு செய்யப்பட்டன. பங்குகள் மீது பெறவேண்டிய அனைத்து தொகையயும் பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து, வங்கி க/கு, பங்குமுதல் க/கு, பங்கு வெளியீட்டுத் தள்ளுபடி க/கு தயாரித்து, இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க.